No. of Printed Pages : **12**

பதிவு எண்
Register Number

| M | A | R | 2 | 0 | 1 | 8 |
|---|---|---|---|---|---|---|

# PART - III

# வணிகவியல் / COMMERCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ]
Time Allowed : 3 Hours ]

[ மொத்த மதிப்பெண்கள் : 200
[Maximum Marks : 200

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - அ / PART – A

**40x1=40**

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**Note :** Answer **all** the questions.

**I.** கொடுக்கப்பட்ட விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

Choose the most suitable answer from the given alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. கூட்டுப்பங்கு நிறுமத்தின் மேலாண்மை ஒப்படைக்கப்பட்டிருப்பது :
(அ) பங்குதாரர்களிடம் (ஆ) நிறுமப் பதிவாளரிடம்
(இ) கடன் பத்திரதாரர்களிடம் (ஈ) இயக்குனரவையிடம்
Management of a Joint Stock Company is entrusted to :
(a) The Shareholders (b) The Registrar of Companies
(c) The Debenture holders (d) The Board of Directors

2. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு :
(அ) கூட்டுப்பங்கு நிறுமம் (ஆ) தனி வணிகர்
(இ) இந்து கூட்டு குடும்பம் (ஈ) கூட்டாண்மை
Registration is compulsory in the case of :
(a) A joint Stock company (b) A Sole trader
(c) A joint Hindu family (d) A partnership

3. ''உலகிலேயே தனி நபர் கட்டுப்பாடு தான் சிறந்தது'' என்று கூறியவர் :
(அ) வீலர்
(ஆ) பி.கே. கோஷ் மற்றும் ஒய்.கே. பூஷன்
(இ) ஓ.ஆர். கிருஷ்ணசாமி
(ஈ) வில்லியம் R. பேசட்
"One man control is the best in the world" - by :
(a) Wheeler
(b) B.K. Ghosh and Y.K. Bhusan
(c) O.R. Krishnaswamy
(d) William R. Basset

4. தனியாள் வணிகத்தில் முடிவெடுப்பது :
(அ) தாமதமாக (ஆ) இரண்டுமில்லை (இ) விரைவாக
Decision - making process in Sole trading business is :
(a) slow (b) neither quick nor slow (c) quick

5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது :
(அ) கூட்டாளிகளிடையே உறவு
(ஆ) அரசின் வழிகாட்டல்
(இ) ஒப்பந்தத்தால்
A partnership is formed by :
(a) Relationship among persons
(b) The direction of government
(c) Agreement

6. கூட்டாண்மையில் உள்ள அனைவரையும் ஒட்டுமொத்தமாக __________ என்றழைக்கின்றோம்.

(அ) நிறுமம் (ஆ) வாரியம்

(இ) கூட்டுறவு (ஈ) நிறுவனம்

Partners are collectively called as __________.

(a) Company (b) Board

(c) Co-operative (d) Firm

7. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை :

(அ) உரிமையர் மற்றும் வேலையாளர்

(ஆ) எஜமானர் மற்றும் பணியாளர்

(இ) முதல்வர் மற்றும் முகவர்

In partnership there exists a relationship of :

(a) owner and servant

(b) employer and employee

(c) principal and agent

8. தனி வரையறை நிறுமம் ஒன்று எப்பொழுது தொழில் தொடங்கலாம் ?

(அ) பதிவாளரிடமிருந்து தான் தேர்ந்தெடுத்துள்ள நிறுமப் பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன்

(ஆ) தொழில் கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன்

(இ) பதிவாளரிடம் நிறும அமைப்பிற்குரிய அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர்

(ஈ) தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்றவுடன்

A private limited company can commence business.

(a) On getting name approval from the Registrar.

(b) Immediately on receiving the certificate of incorporation.

(c) On filing all the documents necessary for formation with the Registrar.

(d) Only after the receipt of certificate of commencement of business.

**9.** பங்குகளை ஒறுப்பிழப்பு (பறிமுதல்) செய்யக் காரணம் :

(அ) அழைப்புப் பணத்தைச் செலுத்தத் தவறுவது

(ஆ) நிறுமத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த மறுத்தல்

(இ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல்

(ஈ) தொடர்ந்து நிறுமத்தின் மூன்று ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருப்பது

Share can be forfeited for :

(a) for non payment of call money

(b) non-payment of any debt due to the company

(c) involvement in violent activities at the annual general meeting

(d) not attending three annual general meetings consecutively

**10.** தனி வரையறை நிறுமத்தில் பங்குதாரரின் பொறுப்பு :

(அ) தனிப்பட்ட சொத்துகளின் அளவாகும்

(ஆ) பங்குகளின் செலுத்தப் பெற்ற மதிப்பளவாகும்

(இ) பங்குகள் மீது கோரப்பட்ட தொகை அளவாகும்

(ஈ) பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பளவாகும்

The liability of shareholders of a private limited company is limited to :

(a) the extent of private assets

(b) the paid up value of the shares

(c) amount called up

(d) amount remaining unpaid on the shares

**11.** ஒரு பொதுவரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு __________ க்கு மிகாமல் வைத்திருக்க வேண்டும்.

(அ) ₹ 50,000 (ஆ) ₹ 5000 (இ) ₹ 500 (ஈ) ₹ 5,00,000

The value of qualification shares of a director in a public limited company shall not exceed :

(a) ₹ 50,000 (b) ₹ 5000 (c) ₹ 500 (d) ₹ 5,00,000

12. ஒரு இயக்குநர் :

(அ) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக

(ஆ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக

(இ) நிறுமத்தின் முகவராக

(ஈ) மேற்சொன்ன அனைத்துமாகச் செயலாற்றுகிறார்

A director is acting as :

(a) the trustee of the company

(b) the chief executive officer of the company

(c) an agent of the company

(d) all of these

13. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர் :

(அ) காளை (ஆ) கலைமான்

(இ) முடவாத்து (ஈ) கரடி

The pessimistic speculator is :

(a) Bull (b) Stag

(c) Lame duck (d) Bear

14. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை :

(அ) மேலாண்மைத் தரகர்கள் (ஆ) பொது விடுப்புகள்

(இ) ஒப்புறுதியளித்தல் (ஈ) விற்பனைக்கான தருமொழி

The popular method of sale of new shares in India is :

(a) Managing Brokers (b) Public issue

(c) Underwriting (d) Offer for sale

15. பத்திரங்கள் ஒப்பந்த (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது.

(அ) 1964 (ஆ) 1952 (இ) 1966 (ஈ) 1956

Securities Contract Regulation Act was passed in :

(a) 1964 (b) 1952 (c) 1966 (d) 1956

16. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் குறைந்தபட்ச அளவு ________ .

(அ) 10 (ஆ) 2 (இ) 25 (ஈ) 7

The minimum number of members required to form a co-operative society is :

(a) 10 (b) 2 (c) 25 (d) 7

17. பங்காதாயம், கூட்டுறவில் _________ அடிப்படையில் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

(அ) பங்குகள் வாங்கிய எண்ணிக்கையில்

(ஆ) ஆதரவின் அடிப்படையில்

(இ) பங்குமுதல்

(ஈ) இவை ஏதுமில்லை

Dividend is declared in a co-operative store to its members on the basis of :

(a) Number of shares purchased
(b) Amount of patronage given
(c) Share capital
(d) None of the above

18. அரசு நிறுமம் இவற்றின் கீழ்ப்பதிவு செய்யப்படுகிறது.

(அ) அரசியல் அமைப்பு சாசனம்

(ஆ) மைய அல்லது மாநில அரசின் தனிச் சட்டம்

(இ) அரசாணை

(ஈ) இந்திய நிறுமச் சட்டம், 1956

Government companies are registered under :

(a) Royal Charter
(b) Special statute of Government
(c) Order of the Government
(d) Companies Act 1956

19. __________ என்பது பாராளுமன்றமோ, சட்டமன்றமோ இயற்றும் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு, தன்னாட்சியுரிமை பெற்ற ஒரு நிறுமமாகும்.

(அ) பொதுக் கழகம் (ஆ) அரசு நிறுமம்

(இ) பன்னாட்டு நிறுவனம் (ஈ) பொது நிறுமம்

A _________ is an autonomous body corporate created by a Special Statute of a State or Central Government.

(a) Public corporation (b) Government company
(c) Multinational company (d) Public company

20. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு :

(அ) அரசு நிறுமம் (ஆ) துறைவாரி அமைப்பு

(இ) கூட்டுப்பங்கு நிறுமம் (ஈ) பொதுக் கழகம்

For the efficient working of State enterprise the form of organisation generally considered suitable is :

(a) Government company (b) Departmental organisation
(c) Joint Stock company (d) Public corporation

**II.** கோடிட்ட இடங்களை நிரப்புக :
Fill in the blanks :

**21.** ஆயுள் காப்பீட்டுக் கழகம் _________ உதாரணமாகும்.
Life Insurance Corporation is an example of _________.

**22.** தனி வணிகரின் பொறுப்பு _________ .
The liability of Sole trader is _________.

**23.** _________ என்பது தொழிலமைப்புகளின் மிகப் பழமையான வடிவமாகும்.
_________ is the oldest form of Business organisation.

**24.** _________ என்பது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மையாகும்.
_________ is a temporary partnership.

**25.** ஒரு கூட்டாளிக்கு கிடைக்கும் இலாபத்தை இன்னொரு நபர் பங்கிட்டுக் கொண்டால் அந்நபர் _________ என்று அழைக்கப்படுகிறார்.
When a person makes an arrangement with a partner to share profit he is known as a _________.

**26.** தனிவரையறு நிறுமத்தில் குறைந்தது _________ இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.
A private company should have atleast _________ directors.

**27.** தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக் கொள்ளத் தேவையில்லாத நிறுமம் _________ நிறுமம் ஆகும்.
The company which need not have separate Articles of Association of its own is _________ company limited by shares.

**28.** நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் _________ என அழைக்கப்படுகின்றன.
Preference Shares which carry a right to arrear dividend are known as _________.

**29.** பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான _________ .
The Shareholders are the real _________ of the company.

**30.** ஒரு பொது வரையறு நிறுமம் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய உறுப்பினர் குறைவெண் _________ ஆகும்.
The Quorum for a general meeting of members of a public company is _________.

31. பொதுவாக தணிக்கையர் __________ கூட்டத்தில் நியமிக்கப்பட்டு ஊதியமும் நிர்ணயிக்கப்படும்.
Auditors are generally appointed and their remuneration is fixed at the __________ meeting.

32. __________ கடன் பெற்றுக் கொண்டதிற்கான ஒரு வாக்குறுதி பத்திரம்.
__________ is an acknowledgement for raising loan from the public.

33. __________ என்பது பங்குகளை வாங்க பொதுமக்களுக்கு விடுக்கும் ஒரு அழைப்பாகும்.
__________ is an invitation to the public to subscribe for the shares.

34. __________ புதிய பங்குகளை வெளியிட இடைத்தரகர்களாக செயல்படுகின்றன.
__________ act as intermediary to float new shares.

35. பங்கு மாற்றகத்தின் அலுவல் பட்டியலில் பங்குகளின் பெயரை இடம்பெறச் செய்வது __________ எனப்படும்.
Inclusion of Securities in the official list of Stock exchange is called __________.

36. இந்தியாவில் __________ பிராந்திய பங்கு மாற்றகங்கள் உள்ளன.
There are __________ regional stock exchanges in India.

37. கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண்மை __________ கொண்டது.
Management of a co-operative society is __________.

38. உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கிய குறிக்கோள் __________ .
Service is the main objective of __________.

39. ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை __________ எனலாம்.
When the Government takes over an existing private concern, it is called __________.

40. __________ துறையில் நுகர்வோரும், பணியாளர்களும் சுரண்டப்படுவது பரவலாகக் காணப்படும்.
Exploitation of consumers and employees is a feature of __________.

## பகுதி - ஆ / PART - B

குறிப்பு : (i) **ஏதேனும் பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். 10x4=40

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **நான்கு வரிகளுக்கு** மிகாமல் விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **any ten** questions.

(ii) Answer to each question should not exceed **four** lines.

**41.** ஒருங்கிணைத்தலின் பொருள் என்ன ?
What do you mean by Co-ordination ?

**42.** வாரிய அமைப்பின் பொருள் பற்றி எழுதுக.
State the meaning of Board Organisation.

**43.** கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளை எழுதுக.
State the various kinds of non-corporate enterprises.

**44.** கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது ?
What are the maximum and minimum number of members in the partnership firm ?

**45.** கூட்டாண்மை கலைப்பிற்கும், கூட்டாண்மை நிறுவன கலைப்பிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?
Bring out the differences between dissolution of partnership and dissolution of partnership firm.

**46.** குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில் என்ன விளைவு ஏற்படும் ?
What is the consequence of not receiving minimum subscription ?

**47.** வரையறு பொறுப்பு என்றால் என்ன ?
What is Limited Liability ?

**48.** சிறப்புப் பொதுக் கூட்டத்தை யார் கூட்டலாம் ?
Who can convene Extraordinary General Meeting ?

**49.** சட்டமுறை அறிக்கை என்றால் என்ன ?
What is Statutory report ?

50. SEBI என்றால் என்ன ?
What is SEBI ?

51. இரண்டாம் நிலைச் சந்தை என்றால் என்ன ?
What is a Secondary market ?

52. ஒரு நபர் ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது ?
What is meant by one man one vote ?

53. கூட்டுறவு பண்டகசாலை என்றால் என்ன ?
What is a Co-operative Warehouse ?

54. A.H. ஹேன்சன் மற்றும் S.S. கேராவின் அரசுத் தொழில்கள் குறித்தான வரைவிலக்கணங்களை தருக.
Give the definitions of A.H. Hansen and S.S. Khera for 'Public Enterprise'.

55. துறைவாரி அமைப்பின் எடுத்துக்காட்டுகள் ஏதேனும் நான்கினை எழுதுக.
Give any four examples of Departmental Organisation.

## பகுதி - இ / PART - C

குறிப்பு : (i) **ஏதேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x8=40**

(ii) ஒவ்வொன்றிற்கும் **ஒருபக்க** அளவிற்கு மிகாமல் விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **any five** questions.

(ii) Answer to each question should not exceed **one** page.

56. இந்து கூட்டுக்குடும்ப வணிகம் பற்றி சிறு குறிப்பு வரைக.
Write short notes on Joint Hindu family business.

57. கூட்டாளிகளின் வகைகள் ஏதேனும் நான்கினை விவரி.
Describe the various kinds of partners. (any four)

58. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை ? (ஏதேனும் எட்டு)
State briefly the contents of Articles of Association. (any eight)

59. பிடிப்பு, துணை - நிறுமங்கள் பற்றி விளக்குக.
Explain about Holding and Subsidiary Companies.

60. ஒரு மேலாண்மை இயக்குநருக்கும் ஒரு மேலாளருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?
State the differences between Managing director and Manager.

61. போல்ட் எவ்வாறு செயல்படுகிறது ? அதன் ஆற்றல்கள் யாவை ?
Explain how BOLT works, and the strengths of BOLT.

62. கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகளைத் தருக.
State the meaning of Super market and explain its special features.

63. அரசு நிறுமத்தின் இயல்புகள் யாவை ?
Explain the features of a Government Company.

## பகுதி - ஈ / PART - D

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **4x20=80**

(ii) ஒவ்வொன்றிற்கும் **இருபக்க அளவிற்கு மிகாமல்** விடையளிக்கவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Answer to each question should not exceed **two** pages.

64. (அ) பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீ அறிவது யாது ? அதன் சிறப்பியல்புகள் மற்றும் எடுத்துக்காட்டுகளையும் எழுதுக.

**அல்லது**

(ஆ) துறைவாரி அமைப்பின் நிறைகள் (5) குறைகள் (5) எழுதுக.

(a) What do you understand by Multinational Companies and explain its features and examples.

**OR**

(b) Discuss the merits (5) and demerits (5) of the Departmental Organisations.

**65.** (அ) தனிநபர் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை ? (ஏதேனும் பத்து)

**அல்லது**

(ஆ) விளக்கக் குறிப்பு வரைக.

(i) ஆண்டுப் பொதுக் கூட்டம்

(ii) இயக்குநர் அவைக் கூட்டம்

(iii) சிறப்புப் பொதுக் கூட்டம்

(iv) சட்டமுறைக் கூட்டம்

(a) Explain the main characteristics of sole trading form of organisation. (any ten)

**OR**

(b) Write explanatory notes on :

(i) Annual General Meeting

(ii) Board Meeting

(iii) Extraordinary General Meeting

(iv) Statutory Meeting

**66.** (அ) கூட்டாளிகளின் உரிமைகள் மற்றும் கடமைகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பல்வகை பங்குகளைச் சுருக்கமாக விளக்குக.

(a) Explain the rights and duties of partners.

**OR**

(b) Explain the different kinds of shares.

**67.** (அ) பங்கு மாற்றகத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை ?

**அல்லது**

(ஆ) கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக. (ஏதேனும் பத்து)

(a) What are the benefits and limitation of a stock exchange ?

**OR**

(b) Distinguish between the Joint Stock Company and Co-operative Society. (Any 10)

- o O o -